**செய்தி வெளியீடு எண்: 920** **நாள்: 14.12.2018**

## செய்தி வெளியீடு

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வீடுகள் மற்றும் மனைகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தில் ஒவ்வொரு கால கட்டங்களிலும் தேவைகேற்ப பணியாளர்கள் கருணை அடிப்படையிலும், நேரடிநியமனம் மூலமும் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். நேரடி நியமனம் செய்யப்படும் போது பத்திரிக்கைகளில் முறையான அறிவிப்பு செய்து எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு மூலம் பணியாளர்கள் வாரியத்தில் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

இந்நிலையில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் அலுவலக சின்னத்தை (Emblem) தவறாக பயன்படுத்தி அதிகாரிகளைப்போல் போலியாக கையொப்பமிடப்பட்டு போலியான பணிநியமன ஆணைகளைத் தயார் செய்து பொதுமக்களை ஏமாற்றும் வகையில் சிலர் செயல்பட்டு வருகின்றனர். அவ்வாறு போலியான பணிநியமன ஆணைகளைத் தயார் செய்து தவறான நோக்கில் செயல்பட்ட நபர்கள் மீது காவல் துறையால் வழக்கு பதிவு செய்து குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே பணி நியமனம் சம்மந்தமாக விவரம் தேவைப்படும் நபர்கள் வாரிய தலைமை அலுவலகத்திற்கு வந்து நேரடியாகவோ அல்லது கீழ்காணும் தொலைபேசி எண் மூலமாகவோ தொடர்புகொண்டு தகவல் பெற்றுக்கொள்ளுமாறும், வாரியத்திற்கு சம்பந்தமில்லாத வெளி நபர்களை நம்ப வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொலைபேசி எண். 044–24352291 , 044–24352029

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**